**கவனிக்க.-** *20.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1830 - 2013 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.09.27

*1830 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1298 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1300 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1306 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

### இலங்கை புகையிரத சேவைகளுக்காக 400 எண்ணிக்கையுள்ள திண்ம சில்லுகளை வழங்குதல்

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 400 எண்ணிக்கையுள்ள திண்மச் சில்லுகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக் கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை அவர்களால் அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரம் பெற்ற முகவரொருவர் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2013.10.09 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. விலைமனுக்கள் இலங்கை கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்கள் அத்துடன் விலைமனு ஆவணத்துடன் 2013.08.27 ஆந் திகதியிலிருந்து 2013.10.08 ஆந் திகதி சாதாரண வேலைநாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப.3.00 மணிக்குமிடையில் (இலங்கை நேரம்) பெறுகைப் பணமாக இலங்கைப் பணத்தில் மூவாயிரம் ரூபாவை (3000/-) செலுத்திய பின்னர் மேற்கூறியவாறு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் மேலேயுள்ள திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள நாட்களில் 3000/- ரூபாவிற்கு சமமான இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு பணத்தை அவர்களின் நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்குச் செலுத்திய பின்னர் இலங்கைத் தூதுவராலயத்தினூடாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை விலைமனு ஆவணங்களை வழங்கும்படி விண்ணப்பிக்கலாம். பெறுகைக் கட்டணமாக மூவாயிரம் ரூபா (3000ரூபா) (அல்லது இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு பணத்திற்கு சமமான தொகை ) மீளளிக்கப்படாத தொகையாகும்.

04. விலைமனுக்கள் இலங்கை, கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் அவைகளை மூடியவுடனேயே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்:-

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
டி.ஆர். விஜேவர்தன மாவாத்தை,
கொழும்பு 10, இலங்கை.

06. விலைமனு ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

07. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்:-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலை திணைக்களம்,
த.பெ.1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078, 2473328
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின் அஞ்சல்: srs.slr@gmail.com
இணையத்தளம்: www.railway.gov.lk

தவிசாளர்
அமைச்சு பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம்: எஸ்.ஆர்.எஸ்./ எவ்.7064

9-955

---

## இலங்கை புகையிரத சேவைகள்

### இலங்கை புகையிரத சேவைகளுக்காக 600 எண்ணிக்கையுள்ள திண்ம சில்லுகளை வழங்குதல்

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 600 எண்ணிக்கையுள்ள திண்மச் சில்லுகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக் கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை அவர்களால் அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரம் பெற்ற முகவரொருவர் மூலமாகவும் சமர்ப்பிக்காலாம்.

02. விலைமனுக்கள் 2013.10.08 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

03. விலைமனுக்கள் இலங்கை கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்கள் அத்துடன் விலைமனு ஆவணத்துடன் 2013.08.26 ஆந் திகதியிலிருந்து 2013.10.07 ஆந் திகதி சாதாரண வேலைநாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப.3.00 மணிக்குமிடையில் (இலங்கை நேரம்) பெறுகைப் பணமாக இலங்கைப் பணத்தில் மூவாயிரம் ரூபாவை (3000/-) செலுத்திய பின்னர் மேற்கூறியவாறு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் மேலேயுள்ள திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள நாட்களில் 3000/- ரூபாவிற்கு சமமான இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு பணத்தை

அவர்களின் நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்குச் செலுத்திய பின்னர் இலங்கைத் தூதுவராலயத்தினூடாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரை விலைமனு ஆவணங்களை வழங்கும்படி விண்ணப்பிக்கலாம். பெறுகைக் கட்டணமாக மூவாயிரம் ரூபா (3000 ரூபா) (அல்லது இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு பணத்திற்கு சமமான தொகை ) மீளளிக்கப்படாத தொகையாகும்.

04. விலைமனுக்கள் இலங்கை, கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் அவைகளை மூடியவுடனேயே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப் படைக்கலாம்.

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
டி.ஆர். விஜேவர்தன மாவாத்தை,
கொழும்பு 10, இலங்கை.

06. விலைமனு ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

07. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலை திணைக்களம்,
த.பெ.1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078, 2473328
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின் அஞ்சல்: srs.slr@gmail.com
இணையத்தளம்: www.railway.gov.lk

தவிசாளர்
அமைச்சு பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம்: எஸ்.ஆர்.எஸ்./எவ்.7056

9-954

## இலங்கை புகையிரத சேவைகள்

ரம்புக்கனை வரையும் பிரதான வீதியில், மாகோ சந்தி வரை வடக்குப் பாதையில், புத்தளம் பாதை, களனி வெளிப்பாதை மற்றும் கடற்கரை யோரப்பாதை ஆகியவை அடங்கலாக புகையிரத முறைமையை இணைத்தல், பரிசோதித்தல் மற்றும் கையளித்தல்

ரம்புக்கனை வரையும் பிரதான வீதியில், மாகோ சந்தி வரை வடக்கு பாதையில், புத்தளம் பாதை, களனி வெளிப்பாதை மற்றும் கரையோரப்பாதை அடங்கலாக புகையிரத தொடர்பாடல் முறைமைக்காக உற்பத்தியாளர்கள் /வழங்குநர்கள் ஆகியோர் களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு , ஒல்கொட் மாவத்தை, த. பெ.355 , புகையிரத தலைமையலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகை குழுவின் தவிசாளர் கோருகின்றார்.

02. விலைமனுக்கள், இலங்கை, கொழும்பு 10 , ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.விலைமனுக்கள் 2013, ஓகத்து 26 ஆந் திகதியிலிந்து 2013, ஒக்டோபர் 10 ஆந் திகதி சாதாரண வேலை நாட்களில் மு.ப.9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையே (இலங்கை நேரம்) மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 5,000 ரூபாவை இலங்கைப் பணத்தில் செலுத்திய பின்னர் அத்துடன் விலைமனுக்கள் 2013, ஒக்டோபர் 11 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம் மூடப்படும்)

03. விலைமனுக்கள் அவைகளை மூடியவுடனேயே இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத சேவைகள் தலைமையலுவலகத்தில் திறக்கப்படும்.விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அத்தாட்சி பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

04. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்:-

தவிசாளர்,
திணைக்கள (உயர்மட்டம்) பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத சேவைகள் தலைமையலுவலகம்,
த.பெ.355,
ஒல்கொட் மாவாத்தை,
கொழும்பு 10,

05. விலைமனு ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

06. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத சேவைகள் களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத சேவைகள் களஞ்சியசாலை திணைக்களம்,
த.பெ.1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078, 2473328
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின் அஞ்சல்: srs.slr@gmail.com

தவிசாளர்
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம்: எஸ்.ஆர்.எஸ்./எவ்.6970

9-1094

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சியெரா சிஸ்டம் இன்ஜினியரிங்(பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94304
கூட்டிணைப்புத் திகதி : 2013.09.03
பதிவு முகவரி : இல. 22, பிரய்ட் பிளேஸ், கொழும்பு 06.

பணிப்பாளர்.

9-1043

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ்கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : ஹோமேஜ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94005
பதிவு செய்யப்பட்ட திகதி : 12.08.2013
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 31/1A, தம்பே வீதி, ஹெடிகம, பிளியந்தல.

பணிப்பாளர்.

9-1045

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த பிளே-பென் மொன்றிசூரி ஸ்கூல் கண்டி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 85220
கூட்டிணைப்புத் திகதி : 2012.03.29
பதிவு முகவரி : இல. 22/2, சங்கராஜா மாவத்தை, கண்டி.

றோஷான் டி ரபாயல்,
செயலாளர்.

9-1179

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜெப்னா பி.பீ.ஓ. டெக்னொலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 93639
கூட்டிணைப்புத் திகதி : 2013.07.31
பதிவு முகவரி : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.

கோபரேட் சேர்விசஸ்(பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

9-1178

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அல்மார் மல்டி மோல்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94150
கூட்டிணைப்புத் திகதி : 2013.08.22
பதிவு முகவரி : இல. 33, ரிங்ரோட், ஈ. பி. இசட் கட்டம் 11, கட்டுநாயக்க.

அல்மார் மல்டி மோல்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

9-1177

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கொனெச் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 93530
கூட்டிணைப்புத் திகதி : 2013.07.16
பதிவு முகவரி : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10

கோபரேட் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்

9-1175

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சிலோன் ஹாட்வேயர் கோப்பரேஷன் லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 5132
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.09.06
*பதிவு முகவரி* : இல. 196, கண்டி வீதி, யக்கல.

பணிப்பாளர்

9-1174

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஓரியன்ட் மெரிடைம் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 94393
*பதிவு முகவரி* : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு- 10.

கோப்பரேட் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-1180

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : குவான்டம் கார்ஃபெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 94092
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.08.16
*பதிவு முகவரி* : இல. 323, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

9-1167

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்கள் அனைவருக்கும் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* :லெபோடெக்னிக் டயக்னொஸ்டிக் லெபோரட்டரிசேர்விஸ்(பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 94080
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.08.15
*பதிவு முகவரி* : 448/1, ரம்முத்துகல, காவத்த.

செயலாளர்.

9-963

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஸ்கை சி -23 (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 93957
*கூட்டிணைப்புத் திகதி* : 2012.08.06
*பதிவு முகவரி* : இல. 46/26, “ஜெட்விங் ஹவுஸ்”, நவம் மாவத்தை, கொழும்பு 02.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி
ஸ்கை சி-23 (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

9-1176

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கொன்கோட் ரிச் கலம்போ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 94193
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.08.23
*பதிவு முகவரி* : இல. 119/D2, அபேரத்ன மாவத்தை, மகுலுடுவ பிலியந்தலை.

எம்.எம்.விஜித மனம்பேரி
செயலாளர்.

9-1090

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என். எச்.ரீ.கன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 93756
கூட்டிணைப்புத் திகதி : 2013யூலை25
பதிவு செய்யப்பட்ட அலவலகம் : "புபுது" கபுகம மேற்கு தெவிநுவர.

பணிப்பாளர்.

9-1226

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்:-
கம்பனியின் பெயர் : கே. என்ட்.எஸ் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 93483
கூட்டிணைப்புத் திகதி : 2013 யூலை 10
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 68/15 ஏ, மாத்தளை வீதி, கட்டுகஸ்தோட்டை.

9-1225

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : ஹமாரா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 94122
கம்பனியின் முகவரி : இல. 46/3, 2 ஆம் ஒழுங்கை, பௌத்தாலோக மாவத்தை, குருநாகல்.

9-1169

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல் .:-

கம்பனியின் பெயர் :ஏ.டி.பெரேரா இலக்ரிகல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 94349
கம்பனியின் முகவரி : இல. 12, பழைய கிருளப்பன ரோட், நுகேகொடை.

9-1170

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2013 ஆவணி 19 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நாகாநந்த இன்டர்நெஷனல் இன்ஸடியுட் ஃபோர் புடிஸ்ட் ஸ்டடீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 94125
பதிவு முகவரி : பொலேகல, களனி

நிறுவனத்தின் முகாமையாளர்
கோ-சேர்வ் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்.

9-1075

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2013 ஆனி மாதம் 04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சன்லைசன் (பிறைவெட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 92851
பதிவு முகவரி : சுமதி கோர்ட், இல.491, காலி வீதி, கொழும்பு 03.

நிறுவனத்தின் முகாமையாளர்
கோ-சேர்வ் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்.

9-1076

---

## பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டதால் ஏற்படும் பெயர் மாற்றம்

மாலபே, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மாவத்தைக்கு அப்பால், மிலேனியம் ட்ரைவ், சுஹத மாவத்தை, 60 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு இலக்கத்திலுள்ளதும் 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பிவி 64641 ஆம் இலக்கத்தையுடைய சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கமைய 2014, செத்தெம்பர் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து செயல்படும் வகையில் ஒரு பொதுக் கம்பனியாக மாற்றப்பட்டு அக் கம்பனியானது அதன் பெயரை சட்டத்தின் 11(1) இன் பிரிவிற்கமைவாக பின்வருமாறு மாற்றியுள்ளதென 2007 ஆம் ஆண்டின்

7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியூட் ஒவ் ரெக்னோலோஜி அன்ட் மெடிசின் லிமிட்டெட்

சபையின் உத்தரவுக்கமைவாக,

ஹேமந்த சனத் தென்னகூன்
கம்பனி செயலாளர்

295ஈ,புவக்கஹதெனிய வீதி ,
ஹோகந்தர.
05 செத்தெம்பர், 2013

9-1091

---

## அறிவித்தல்

யுனிவேர்சல் பீஸ் ஃபெடரேசன் லங்கா (கெரண்டி) லிமிட்டெட் என்ற கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கிணங்க அதன் பெயரிலிருந்து "லிமிட்டெட்" என்ற சொல்லை விட்டுவிடுவதற்கு சொல்லப்பட்ட கம்பனிக்கு அதிகாரமளித்து கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் பிரகாரம் 2013 யூன் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து அதன் பெயரை யுனிவேர்சல் பீஸ் ஃபெடரேசன் லங்கா என மாற்றியுள்ளதென மேற்கூறப்பட்ட சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : யுனிவேர்சல் பீஸ் ஃபெடரேசன் லங்கா (கெரண்டி) லிமிட்டெட்
கம்பெனியின் இலக்கம் : ஜீஎல் 2025 ஜீஏ
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 264/1-3, சென்ட் பிரான்சிஸ் ஒழுங்கை , தலுகம, களனி.
கம்பனியின் புதிய பெயர்: யுனிவேர்சல் பீஸ் ஃபெடரேசன் லங்கா

சபையின் கட்டளைப்படி,
செயலாளர்.

9-1168

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

135-918 சீயோல், கங்னாம்-கு, யியோக்சாம் 707-19 என்ற முகவரியிலுள்ள சம்சுங் எஸ்டிஎஸ் கம்பனி லிமிட்டெட்டின் பணிப்பாளர்களாகிய திரு. அல்பிரட் சுன்டோங் கோ மற்றும் கய்பொங் ஒ ஆகிய நாம், எஸ். கிவ். 0167748 என்ற இலக்கமுடைய கடவுச்சீட்டை உடையவரும் இல.9-03, கிழக்குக் கோபுரம், எச்சலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01, என்ற முகவரியையும், கொரியா, சீயோல், ஜொங்-நொ-கு, 201-1 சியோஜிஜின்-டொங், ஜின்ஹக் ஹொய்க்வான் பி/டி 403 மத்திய மாவட்ட வழக்குத்தொடர்பவர்களின் சேவை, சீயோல்,ஹன்மி சட்டம் மற்றும் நொத்தாரிசு அலுவலகத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கிம் சீயோல் கீ என்பவரால் 2010 யூலை மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு, அற்றோணித் தத்துவப்பதிவேட்டின் 136 ஆம் பக்கத்தில் 34 ஆவது தொகுதியின் 5479 என்ற இலக்கமுடைய நாட் புத்தகத்தில் 2010.07.28 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டு எம்மால் அற்றோணித்தத்துவம் திரு. வூடியெக் ஜீயோன் என்பவரை நியமனஞ்செய்து, வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2013 செத்தெம்பர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து இத்தால் இரத்து செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

அல்பிரட் சுன்டோங் கோ மற்றும் கய்பொங் ஒ
சம்சுங் எஸ்டிஎஸ் கம்பனி லிமிட்டெட்
பணிப்பாளர்கள்

9-1173

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. ஜி.31/ 1, என். எச்.எஸ். செர்பென்டியன் ரோட், கொழும்பு-08 ஐச் சேர்ந்த தர்மலிங்கம் நித்தியமலர் ஆகிய நான் இல. 261, ஏ சதசிறி புற ஒருவல அதுருகிரியவைச் சேர்ந்த முகுன்தகுரு வில்ப்ரேட் தி பொன்சேகா என்பவருக்கு வழங்கிய பிரசித்த நொத்தாரிசு உதய பண்டார என்பவரினால் இல. 29, 2009.12.10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான அட்டோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்றும், இன்றிலிருந்து குறித்த தத்துவதக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்களெதனையும் நான் ஏற்றங்கீகரிக்கமாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அறியத்தருகின்றேன்.

தர்மலிங்கம் நித்தியமலர்

9-1017

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ரஜகதளுவ, ஆராய்ச்சிக்கட்டுவ, 263 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வீரக்கூன் சிறிநாத் கிறகொறி பெரேரா ஆகிய நான், கந்தானை பிரசித்த நொத்தாரிசு டி.ஆர்.ஏ. சன்னங்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 9618 என்ற இலக்கத்தையும் 2009 ஒகஸ்ட் 11 திகதியையுடையதும் மேற்கூறப்பட்ட இலங்கைச் சோசலிசக் குடியரசின் சிலாபம், அமுத்வத்தை, 3 ஆவது ஒழுங்கை, 89/38 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 508233787V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையையுடையவருமான எனது மாமியார் அத்தியடிகே டோனா வயலட் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்துள்ளேன் என பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன். எனவே மேற்கூறப்பட்ட அத்தியடிகே டோனா

வயலெற்றினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயல் மற்றும் இழைக்கப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் இத் திகதியிலிருந்து நான் பொறுப்பேற்க மாட்டேன்.

வீரக்கூன் சிறிநாத் கிறகொறி பெரேரா,

இல.263, ஆரச்சிக்கட்டுவ, ராஜகதளுவ.
2013,செத்தெம்பர் 05.

9-966

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிரசித்தி பெற்ற நொத்தாரிசு திரு. ஜயந்த பண்டார என்பவரால் எழுதி உறுதிபடுத்தப்பட்ட இலக்கம் 72 மற்றும் 2012. 10.08 ஆம் திகதி கொண்ட விசேட அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

என்னால் அற்றோணி அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஹிந்தகல, கல்வல, இல. 297/E என்னுமிடத்தில் வசிக்கும் வரவிஹேனே கெதர லால் ஆனந்த காமினி (தே.அ.அ.இ. 713334774 V என்பவருக்கு கண்டி பிரசித்த நொத்தாரிசு ஜயந்த பண்டார என்பவரால் எழுதிய 2012.10.08 ஆந் திகதி கொண்ட விசேட அற்றோணி அதிகாரத்தை 2013.09.02 ஆம் திகதி முதல் இரத்து செய்து விட்டதாக இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

ரத்னாயக்க முதியன்சேலாகே டெக்டா
சாந்தனி சேனாரத்ன,

இல.317/77, மஹகந்த
ஹிந்தகல.
2013 செத்தெம்பர் 02

9-1189

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் அடிப்படையில் NDB ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்டின் பெயரை பின்வருமாறு மாற்றியமைத்தலுக்கான அறிவித்தலை விடுக்கின்றோம்:-

முந்தைய பெயர் : NDB ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 1961
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02
கம்பனியின் புதிய பெயர் : NDB செக்கியுருட்டிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்

சபையின் பணிப்புரைக்கமைய.
மயோமி சமரவிக்கிரம
கம்பனி செயலாளர்

9-1186

---

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் தருகின்றோம்:-

கம்பனியின் முன்னைய பெயர் : ட்ரீம் லகூன் (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 80935
கம்பனியின் புதிய பெயர் : ஹர்ஷட ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
பெயர் மாற்றப்பட்ட திகதி : 06 செத்தெம்பர் 2013

ஹர்ஷட ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்

பி.டபிள்யு.கோப்பறேட் செக்கரட்டேரியல்(பிறைவெட்) லிமிட்டெட்

கம்பனி செயலாளர்கள்
10 செத்தெம்பர் 2013

9-1161

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ்வரும் நிறுவனங்கள் பதியப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : பிரேஸ்டிஜ் பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93891
கூட்டிணைப்புத் திகதி : 01.08.2013
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 166, பழைய கெஸ்பேவ வீதி, கங்கொடவில, நுகே கொடை.

திகதி : 1, ஒகத்து 2013.

கம்பனிச் செயலாளர்.

9- 1193/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுளதென அறிவிக் கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பி. ஜே. எஸ். பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93643
கூட்டிணைப்புத் திகதி : 18, யூலை 2013.
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 166, பழைய கெஸ்பேவ வீதி, கங்கொடவில, நுகேகொட.

கம்பனிச் செயலாளர்.

9- 1193/2

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : டிஜிரல் டிரீம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 75658
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம் : இல. 458/10, பிலியந்தலை வீதி, மஹரகமை.
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 24, நவெம்பர் 2010.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : கியோட்டாஇன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93327
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம் : இல. 180/1, வட்டத்தார, வியாங்கொடை.
கூட்டிணைப்புத் திகதி : 01, யூலை 2013.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9- 1203/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : ஏடி லிப் பிக்ச்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 88709
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 42/1/7, நியன்தகால வீதி, பன்னிப்பிட்டி.
கூட்டிணைத்தல் திகதி : 09, ஒற்றோபர் 2012.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/3

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : பிளேட்டினம் லங்கா இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 89518
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 202/32, த பினான்ஸ் வத்தை, குருநாகல் வீதி, மினுவாங்கொடை.
கூட்டிணைத்தல் திகதி : 22, நவெம்பர் 2013.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/4

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல :-

கம்பனியின் பெயர் : ஓப்பன் வேர்ல்ட் எடியுகேஸன் சென்றர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 92759
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 281/15, டீன்ஸ் வீதி, மருதாணை, கொழும்பு 10.
கூட்டிணைத்தல் திகதி : 29, மே 2013.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/5

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : செரென்டிப் வென்ச்சர்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93014
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 392, காலி வீதி, கொழும்பு 3
கூட்டிணைப்புத் திகதி : 12, யூன் 2013.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/6

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : வீ. எம். ஜே. பிரின்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93713
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 9, கந்தவல வீதி, இரத்மலானை.
கூட்டிணைத்தல் திகதி : 23, யூலை 2013.

அப்டேட் (பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/7

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : டபிள்யூ. டி. சீ. வைன் ஸ்டோர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 88376
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 103, மாத்தறை வீதி, காலி.
கூட்டிணைத்தல் திகதி : 20, செத்தெம்பர் 2013.

அப்டேட் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/8

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : இமோவேஷன் சொலியுஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 86902
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 392, காலி வீதி, கொழும்பு 03.
கூட்டிணைத்தல் திகதி : 11, யூலை 2012.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/9

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : ஒஸ்ரா இன்வெஸ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 92932
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 19/3, ஹொஸ்பிட்டல் ரெரஸ், சுனந்தாராம வீதி, களுபோவில, இலங்கை.
கூட்டிணைத்தல் திகதி : 12, யூன் 2013.

சுப்றீம் கன்ஸல்ரன்சீ சேர்விஸஸ்
(பிரைவேட்)லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-1203/10

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.72283744

திருமதி ரணதுங்க ஆராச்சிகே அருந்ததி தயாரத்ன மற்றும் திரு. வேரதந்திரிகே அஸித்த போதேஜு ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 04.05.2013 ஆந் திகதிய 1805 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 20.03.2013 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹெவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களினால் 2013.10.23 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

## அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹைகம்கோரளை அதிகாரிபற்றுவில் பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குள் கம்குறுகொடையில் அமைந்த "தல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சிரில் விக்கிரமகே தயாரித்த 2010 நவம்பர் 15ஆம் திகதியிட்ட வரைபடம் இல. 7244 இல் விபரித்த துண்டு 2BC என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபட இல.1509 இல. துண்டு 2A; கிழக்கில்: பிரதேச சபை ரோட்; தெற்கில்: வரைபடம் இல. 1509/ 2C இல் துண்டு 2C2; மேற்கில் :வரைபடம் இல.1509 இல் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 7244 இன் படி முப்பது பேர்ச்சு (0ஏ.0றூ.30 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒன்றிணைப்பு ஆகும்:-

மேற்குறிப்பிட்டவாறு கம்புறுகொடையில் அமைந்த "தல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிரில் விக்ரமகே தயாரித்த 1993 ஒக்டோபர் 24 திகதியிட்ட வரைபடம் இல. 1509 இல் விபரித்த துண்டு 2B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: துண்டு 2A யும்; கிழக்கில்: றோட்டும்; தெற்கில்: துண்டு 2C ; மேற்கில்: துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1509 இன் படி பதினைந்து பேர்ச்சு (0ஏ.0றூ.15 பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள்,கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் B 197/168 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு கம்புறுகொடையில் அமைந்த "தல்கஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிரில் விக்ரமகே தயாரித்த 1995 செத்தெம்பர் 16 திகதியிட்ட வரைபடம் இல. 1509/2C இல் விபரித்த துண்டு 2C1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: வரைபடம் இல. 1509 இல் துண்டு 2B யும்; கிழக்கில்: றோட்டும்;தெற்கில்: துண்டு 2C2 ; மேற்கில்: வரைபடம் இல. 1509 இல் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1509 இன் படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ.0றூ.15 பே) விஸ்தீரணமுடையது. இது ஹொரணை காணிப்பதிவகத்தில் B 200/74 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி)ஆர்.ஏ.டி.பி ரணசிங்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஜனாதிபதி மாவத்தை.
பண்டாரகம.
02 ஓகத்து 2013

9 -1106

## கொமர்ஷல் பேங்க் PLC அம்பலாந்தோட்டை கிளையின் பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

பெறுமதிமிக்க வியாபாரத்திற்கு /வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து அம்பலாந்தோட்டை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எம்பிலிபிட்டிய- நோனகம பிரதான பாதையில் மாமடல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.W.C.N.J.பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 30.10.2007 ஆம் திகதிய அ.க.பி. 464/31 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1299 எனும் காணித்துண்டு அதனுள்ளடங்கும் மூன்று மாடிக் கட்டிடமும் மற்றும் கட்டிடங்களும் சகலதுமாகும். இது 0.052 ஹெக்டேயர் (20.55 பர்ச்சஸ் )பரப்பளவானது.

ஆதனத்தை வந்தடைதல் : அம்பலாந்தோட்டை நகர மத்தியிலிருந்து தங்கல்ல பாதையில் சுமார் 3.8 கி.மீ. தூரம் வரை நோனகம சந்தி வரை வந்து வலது பக்கமாக திரும்பி எம்பிலிபிட்டிய பாதைக்கு பிரவேசித்து இந்த பாதையில் சுமார் 5.3 கிலோமீற்றர் மாமடல பன்சலை பாதையின் எல்லையில் இடது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் கொகு ஹென்னதிகே விலி வில்பிரட் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க; PLC யிற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

இவ்வாதனம் 17.10.2013 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** : 15.02.2013 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 31.01.2013 ஆந் திகதிய ''த ஐலன்ட்'',''லக்பிம'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**:- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவு ஏல விற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

1. கொள்முதல் விலையின் 10%.(நூற்றுக்கு பத்து)
2. பிரதேசபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும்
3. ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை)
4. நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ.2000
5. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ.500
6. சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்கு கொமர்ஷல் பேங்க் P.L.C. காரியாலயத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்க வேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : முகாமையாளர் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P.L.C., இல. 26, காலி வீதி, அம்பலாந்தோட்டை தொலைபேசி இல.047-2223816/2223818, 2223819.

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்
இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி.
தொலைபேசி: 071-4755974,071-8446374,
077-7761706.
தொலைநகல்: 081-2210595

9-1181

---

## ஹற்றன் நெசனல் வங்கி ப. வ. க. - கிருளப்பனை கிளை

(முன்பு வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெசனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம்,கொழும்பு மாவட்டம், மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள், சல்பிட்டி கோரளை, பல்லேபற்று, கிருளப்பனையில் அமைந்துள்ளதும் சுவர்ணா வீதி, வரிமதிப்பு இல. 51/53 ஐக் கொண்டதும் "வெல்லேஅம்பலமேவத்தை" என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சிங்க நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1961 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம்16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 432 இல் துண்டு இல. பி 6 என குறிப்பிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை**

**காணியின் விஸ்தீரணம் : ஏழு தசம் மூன்று மூன்று பேர்ச்சு(0ஏ.0றூ.7.33பே.)**

(கடப்பாடுடையவரான ரீ.கே.பொலி பெக்கேஜிங் (பிறைவெட்) லிமிட்டெட் இற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நசனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி:** ஹெவலொக் வீதியிலிருந்து மயூரபதி கோவில் வளவுகள் வரை சென்று, வீதிக்கு எதிரேயுள்ள சுவர்ண வீதிக்கு புகுந்து வீதியின் பரந்த பாகத்திற்கு உட்புகுவதற்கு வீதியின் ஒடுங்கிய பாகம் வழியே சிறிது தூரம் சென்று, சொல்லப்பட்ட வீதியின் வலதுபக்கம் வழியே அமைந்துள்ள வரிமதிப்பு இல. 51/53 ஐக் கொண்ட விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு சொல்லப்பட்ட வீதி வழியே வரிசை வீடுகளுக்கு இட்டுச் செல்லும் இடதுபக்கத்திலுள்ள தாரிடப்பட்டுள்ள மோட்டார் வண்டி செல்லக்கூடிய வீதிக்கு உட்புகவும்.

மேலே விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2013, நவம்பர் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு:** 05.07.2013 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 19.07.2013 ஆம் திகதிய "லக்பிம" "டெய்லி மிரர்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்:-** வெற்றி பெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%.(பத்து வீதம்)
2. உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1%(ஒரு வீதம்)
3. ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்)
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;
5. விற்பனை செலவு மற்றும் வேறேதும் கட்டணங்கள் (இருப்பின்)
6. விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள், அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரி.பி.ஜாயா மாவத்தை, இல.479, ஹற்றன் நசனல் வங்கி ப.வ.க., உதவிப் பொது முகாமையாளர், அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும்.தொலைபேசி இல.011-2661816, 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்ஸ் ஒக்ஷன்ஸ் (பீவீரி)
லிமிட்டெட்,
நிபுணத்துவம் பெற்ற உத்தரவு
பெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர் மற்றும்
ஆதன முகவர்.

இல.146/3, கல்தேரா காடின்ஸ்
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவலை.
தொலைபேசி இல. 011 4302622, 011 24302623, 011 2856013.

9-1227

---

## ஹற்றன் நெசனல் வங்கி PLC - கல்முனை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால்வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி PLC பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சுலைமா லெப்பை மொகமட் நௌபர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி PLC இற்கு ஈடுவைக்கப்பட்ட

இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***1 ஆம் விற்பனை : 21.10.2013 மு.ப. 11.00 மணிக்கு***

***ஆதனத்தின் விபரம்***: கல்முனை நகர சபை எல்லைக்குட்பட்ட கல்முனை தொகுதி இல. 3 இல் கல்முனைக்குடி எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் C. பத்ம நாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 12.02.2005 ஆம் திகதிய 18/2005 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள பிரித்தெடுக்கப்பட்ட தரவாய்க் கோவில் (Tharavaik Kovil) பாதையில் அமைந்துள்ள வரிப்பண இல. 57/20 எனும் இருமாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது 4.48 பர்ச்சு பரப்பளவானது.

***ஆதனத்தை வந்தடைதல்*** : கல்முனை நகர மத்தியிலிருந்து அக்கரைபற்று பாதையில் சுமார் 01 கி.மீ தூரம் சென்று இடது பக்கத்தில் சந்திக்கும் தரவாய் கோவில் பாதைக்கு பிரவேசிக்கவும். இப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாகவுள்ள மாதவன் குறுக்குப் பாதைக்குத் திரும்பவும். இவ்வாதனம் மாதவன் குறுக்குப் பாதையில் சுமார் 50 மீற்றர் தூரத்தில் இந்த குறுக்குப் பாதையூடாக சந்திக்கும் தனியார் பாதையில் வலதுபக்கத்தில் அமைந்துள்ளது.

***2 ஆம் விற்பனை : 21.10.2013 மு.ப. 11.15மணிக்கு***

***ஆதனத்தின் விபரம்***.- கல்முனை நகர சபை எல்லைக்குட்பட்ட கல்முனை கல்முனைக்குடி எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் C.பத்மநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 153/ 2004 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள பிரித்தெடுக்கப்பட்டலொட் 1 மற்றும் 2 எனும் காணித்துண்டு அதனுள்ளடங்கும் மாதவன் பாதையில் அமைந்துள்ள வரிப்பண இல. 58/1 எனும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது 06.83 பர்ச்சர்ஸ் பரப்பளவானது.

***ஆதனத்தை வந்தடைதல்*** : கல்முனை நகர மத்தியிலிருந்து அக்கரைபற்று பாதையில் சுமார் 3/4 கி.மீ தூரம் சென்று இடது பக்கமாகவுள்ள பன்சலை பாதைக்கு திரும்பவும். இப்பாதைக்கு சுமார் 50 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகவுள்ள பன்கலை ஒழுங்கைக்குத் திரும்பவும் . இவ்வொழுங்கையில் சுமார் 75 மீற்றர் சென்று இடது பக்கத்தில் சந்திக்கும் மாதவன் பாதைக்குள் பிரவேசித்து சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***: 17.05.2013 ஆம் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 27.05.2013 ஆம் திகதியுடைய “லக்பிம”டெய்லி மிரர்” மற்றும் “தினகரன்” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு செய்யும் விதம்:- வெற்றி பெரும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்:-

1. கொள்முதல் விலையின் 10%.(நூற்றுக்கு பத்து );
2. பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று)விற்பனை வரி;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்குஇரண்டரை வீதம்);
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
5. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500;
5. விற்பனை செலவு மற்றும் வேறேதும் கட்டணங்கள் (இருப்பின்) ;
6. விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000;

கொள்முதலில் மிகுதி 90%.இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சடைபயினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை, வரி, விற்பனை வரி, அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்) ஹட்டன் நஷனல் வங்கி P.L.C., இல. 479, டி.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.011 2661835, 011 2661836, 011 2661826

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி.
தொலைபேசி: 071-4755974,071-8446374,
077-7761706.
தொலைநகல்: 081-2210595

9-1183

---

**செலான் வங்கி பிஎல்சி - நுகேகொடை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**ஆதனங்கள் ஏல விற்பனை**

*கடன்பட்டோர் என்ற வகையில் பத்தரமுல்லையைச் சேர்ந்த விந்தியா நிலக்சி ரூபசிங்க மற்றும் ஹங்கிடி ஹெதர குயின்டஸ் ஆரியரட்ன என்பவர்களுக்காக பத்தரமுல்லையில் வியாபாரப் பதிவு இல. என்(பி வி எஸ் ) 22183 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய 'வேய் மாஸ்டர் இன்டநெசனல் (பிறைவெட்) லிமிட்டெட் ' இற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பிஎல்சி இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள்.*

***முதலாவது ஏல விற்பனை:*** பத்தரமுலல்ல நகர சபைஎல்லைக்குட்பட்ட வரிமதிப்பீட்டு இல. 97/9 மற்றும் 97/10 (புதிய இல. 97/16 மற்றும் 97/17 ) கடுவல வீதி, பத்தரமுல்லை. இது எட்டு தசம் ஒன்பது ஆறு பேர்சச் (0ஏ.0றூ8.96பே)விஸ்தீரணத்தைக் கொண்டது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2013 ஒற்றோபர் 22 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

இரண்டாவது ஏல விற்பனை: வரிமதிப்பீட்டு இல. 97/5 கடுவல வீதி, பத்தரமுல்லை. பத்து தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சர்ஸ் (0ஏ.0றூ.10.95பே)விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

வழிமுறை உரிமை அதன் மீதாகவும் அத்துடன் அதனூடகவும், அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ.ஏ.எவ். யாப்பா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 04.07.1975 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 372/CH/D/1/685/810 இன் துண்டுகள் 4.5 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. (அத்துடன் அனுமதிபெற்ற நில அளவையாளர் எச்.ஏ. பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்டு 24.09.1977 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 2150 இல் துண்டு 4 இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2013 ஒற்றோபர் 22 ஆம் திகதி மு.ப. 10.45 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்: பத்தரமுல்லை பஸ்தரிப்பிடத்திலிருந்து கடுவல பிரதான வீதி மார்க்கமாக 100 யார் தொலைவில் சென்று இடது பக்கமாக உள்ள லியோநாட் பெரேரா மாவத்தையால் திரும்பி சென்று அங்கிருந்து 100 யார் தொலைவில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு :- 02.03.2012 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 23.02.2012 ஆந் திகதிய ''டெய்லிமிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 21.02.2012 ஆம் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை:-** வெற்றிகரமான கொள்வளவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

1. கொள்முதல் விலையின் 10%.(நூற்றுக்கு பத்து);
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்கு பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி;
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக (2 .5% ) ;
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணமும் ரூ.2000;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூ.500;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சி யில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தபட்ட ஆவணங்கள் பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்) செலான் வங்கி P.L.C., செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 03, என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல.2456482, 2456487

ரி அன்ட் எச் ஒக்சன்
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி: 011-3068185-2572940,

துசித கருணாரத்ன(ச.நீ)
அனுமதிபெற்ற ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளர்.

9-1231

---

**சம்பத் வங்கி லிமிட்டெட்**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1004 5316 6016 - ஏ.கே.எம். முனசிங்ஹ மற்றும் டபிள்யூ. ஏ. பீ. ஐராங்கனி.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2008.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.03 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2009.09.07ஆந் திகதிய ''திவயின''''ஐலண்ட'', மற்றும் ''தினக்குரல்'' ஆகிய தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை எண்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தி ஆறு ரூபா பத்து சதம் 86,32,756.10) 2008, சனவரி 29 ஆந் திகதி முதல் இல. 3052 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எண்பது இலட்சத்து நாற்பதாயிரத்து முன்நூற்று தொண்ணூற்றி இரண்டு ரூபா ஐம்பத்தி ஒரு சதம் (80,40,392.51) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்ட, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. பீ.கே. ஈ. சேனாபதி அவர்கள் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை 2013.10.30 ஆந் திகதியன்று அதே இடத்தில் வைத்து மு.ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே தெற்கின், அம்பத்தலென் பாஹாலவின் கொட்டிக்காஹாவத்தை- முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளுக்குள், கொட்டிக் காஹாவத்தையில் அமைந்த 'முறுத்கஹா கும்புர மற்றும் ஓவிட்ட, முறுத்கஹா ஓவிட்டவத்த, வட்டாலிகேவத்த''மற்றும் ''சுதுவேகும்புர'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்கிரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, பெப்புருவரி 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 6410A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கிற்கு : இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் A இன் எஞ்சிய பகுதி; கிழக்கிற்கு: வீதி மற்றும் இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் A இன் எஞ்சிய பகுதி தெற்கிற்கு: இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் A இன் எஞ்சிய பகுதி; மற்றும் மேற்கிற்கு: இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் A இன் எஞ்சிய பகுதி இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு (0ஏ. 1றூ. 0பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட இல. 6410 A எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவத்தில் பரிமாணம்/பக்கம் B 893/187 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-1218